தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆகஸ்ட் 2015 மாதத்திற்க்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

ஆகஸ்ட் மாதத்திற்க்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் அறிக்கை.

**நெல்பயிர்**

கோயமுத்தூர், ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில் நெல் பயிரில் இலைச் சுருட்டுப் புழு மற்றும் தண்டுப் புழு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றன. பூச்சிகளை கட்டுப்படுத்த வயல்களில் விளக்கு பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்திப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும்.

பூச்சிகளின் தாக்குதல் அதிகமாய் தென்பட்டால் வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பாசலோன் 35 இ . சி 1500 மில்லி / எக்டர் அல்லது குனைல்பாஸ் 25 இ . சி 1000 மில்லி / எக்டர் அல்லது பாஸ்மோமிடான் 40 எஸ் . எல் 1250 மில்லி / எக்டர் தெளிக்கவும்.

நெல்லில் இலைப்புள்ளி நோயின் தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் மான்கோசோப் (2 கிராம் 1 லிட்டர் தண்ணிருக்கு) தேவைக்கு ஏற்ப 2 அல்லது 3 முறை 10-15 நாட்கள் இடைவெளியில் நோயின் தாக்கத்திற்கு ஏற்ப தெளிக்கவும்.

**பருத்தி**

திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் பருத்தியில் காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு ஐந்து வைத்து தாய் ஆண் அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். அதிகம் சேதம் உள்ள பயிர்களில் (1000 லிட்டர் தண்ணீர் / எக்டருக்கு) கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பாசலோன் 35 இ.சி 2.0 லிட்டர் / எக்டர் அல்லது குனைல்பாஸ் 25 இ.சி 2 லிட்டர் / எக்டர் அல்லது கார்பரில் 50 WP 2.5

*கிலோ / ஏக்கர் அல்லது அல்லது பிரபினோபாஸ் 50 இ . சி. 1000 மில்லி / எக்டர் பயிர்களில் தெளிக்கவும்.*

*சேலம் மாவட்டத்தில் பருத்தியில் வெள்ளை ஈயின் தாக்குதல் காணப்படுகின்றது. இவற்றை கட்டுப்படுத்த தாவரப் பூச்சிகொல்லி மருந்தினை தெளிக்கவும்.*

*வேப்பங் கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப்ப எண்ணை 3 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது மீன் எண்ணை சோப் 25 கிலோ (1 கிலோ 40 லிட்டர் தண்ணீருக்கு) அல்லது நொச்சி இலைச்சாறு 5 சதம் அல்லது கீழ்கானும் ஏதாவது ஒரு மருந்தினை பயிர்களில் தெளிக்கவும்.*

***1. இளம் பருவத்தில் - (500 லிட்டர் தண்ணீர் / எக்டர்)***

*அசிடாமிபிரைடு 20 எஸ். பி. 100 கிராம் / எக்டருக்கு அல்லது புப்ரோபேசின் 25 எஸ்.சி 1000 மில்லி / எக்டருக்கு.*

***2. மத்திய மற்றும் வளர்ந்த பருவத்தில் (1000 லிட்டர் தண்ணீர் / எக்டருக்கு)***

*டையபென் தையூரான் 50 டபிள்யூ . சி. 600 கிராம் / எக்டர் அல்லது பிப்ரோனில் 5 எஸ். சி. 340 மி.லி / எக்டர் அல்லது ட்ரை அசோபாஸ் 40 இ.சி 2 லிட்டர் / எக்டருக்கு அல்லது புரோப்னோபாஸ் 50 இ.சி. 1000 மி.லி / எக்டருக்கு.*

***நிலக்கடலை***

*கோயமுத்தூர், ஈரோடு, தர்மபுரி, திருநெல்வேலி, திருவண்ணமாலை, புதுக்கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில் நிலக்கடலையில் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒரு விளக்கு பொறி வைத்து அந்திப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும் தேவைப்படின் கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினை பயிர்களில் தெளிக்கவும். டைபுளுபென்சுரான் 25 டபிள்யூ . சி 400 கிராம் / எக்டர் அல்லது மானோகுரோட்ட பாஸ் 36 டபிள்யூ . சி 500 மில்லி / எக்டர் அல்லது குளோர் பயிர் பாஸ் 20 இ . சி 1250 மில்லி / எக்டர் அல்லது குயினல்பாஸ் 25 இ . சி 1500 மில்லி / எக்டர்.*

*தஞ்சாவூர், திருவாரூர், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இலைப்புள்ளிகளின் தாக்குதல்கள் தென்படுகிறது, இவற்றைக் கட்டுப்படுத்த கார்பன்டாசிம் 500 கிராம் (அ) மான்கோசாப் 1000 கிராம் (அ) குளோரோதலானில் 1000 கிராம் ஒரு எக்டருக்கு தெளிக்கவும். தேவைப்பட்டால் 15 நாட்கள் கழித்து மறுபடியும் தெளிக்கவும்.*

***வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் மேலாண்மை***

*பருவமழை மேலும் தாமாதமானால் வறட்சி தொடர வாய்ப்புள்ளது. அவ்வாறான சூழ்நிலையில் சாறு உறுஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், வெள்ளை ஈ, சுருள் வெள்ளை ஈ மற்றும் பலவகையான மாவுப்பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக வாய்ப்புள்ளது.*

இவற்றை மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து (5 பொறி, ஏக்கருக்கு) கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணைய் சோப் 1 கிலோ 40 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.

**காய்கறிப் பயிர்கள்**

**தக்காளி**

காய்துளைப்பானை கட்டுப்படுத்த தக்காளி பயிர்களுக்கு நடுவே ஊடு பயிராக சாம்மந்தி செடிகளை 1:16 வரிசையில் நடவும். இனக்கவர்ச்சி பொறிகள் (12/ எக்டர்) அமைத்து அந்திப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். முட்டை ஒட்டுண்ணி *ட்ரைக்கோகிராமா* வினை (50,000 / எக்டர்) பூக்கும் பருவத்தில் விடவும். தேவைப்படின் *பேசிலாஸ் துரிஞ்சியசிஸ்* 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது வேம்பு பூச்சி மருந்து 1.0% இ. சி (10000 பிபிஎம்) 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது இன்டாக்சாகார்ப் 14.5% எஸ். சி 8 மில்லி 10 லிட்டர் தண்ணீருக்கு அல்லது புளுபென்டமைடு 20 டபில்யு. ஜி 5 கிராம் /10 லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

இலை துளைப்பான் பூச்சி தாக்குதலை கண்காணிக்க மஞ்சள் ஒட்டும் பொறி (12/ எக்டர்) அமைத்து கண்காணிக்கவும். பூய்ப்ரோபேசின் 25 எஸ்.சி 1 மில்லி / 1 லிட்டர் (அல்லது) துத்தி டைமித்தோபியட் 1 மில்லி / 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். களைச் செடிகளை பிடுங்கி அழிக்கவும்.

**வெண்டை**

மஞ்சள் தேமல் நோய்யை கட்டுப்படுத்த வெள்ளை ஈ யின் நடமாட்டத்தை மஞ்சள் ஒட்டும் பொறி (12/ எக்டர்) அமைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் மித்தைல் டெமட்டான் அல்லது டைமித்தோயேட் 2 மில்லி அல்லது இமிடாகுளோரோபைரிட் 17.8 எஸ்.எல் 2 மில்லி 10 லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

**மிளகாய்**

மிளகாயில் காய் புழுக்களை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகள் (12/ எக்டர்) அமைத்து அந்திப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். தாக்கப்பட்ட காய்கள் மற்றும் வளர்ந்த புழுக்களை கைகளினால் எடுத்து அப்புறப்படுத்தவும். தேவைப்படின் *பேசிலாஸ் துரிஞ்சியசிஸ்* 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்